1978 ஏப்ரல் 7] [பேரவைத் தலைவர்]

ஆய்வுக்குழுவுக்கு அனுப்பப்பெற்றது-1. விதி 82-ன் கீழ் பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைகள்-9. சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வந்துள்ள பார்வையாளர்கள்: மொத்தம் 54,285. மேலும், ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக் பாராளு மன்ற அவைத் தலைவர் தலைமையில் அந்நாட்டின் பாராளுமன்ற குழு, 6-3-78-ம் நாளன்று நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் காண வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர்களும், ஆளும் கட்சி மன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும் என்னோடு இத்தனை நாட்கள் சிறப்பாக ஒத்து ழைத்து, இந்த மன்றத்தில் நம்முடைய மரபு காத்து அன்பு காட்டி யதற்கும் சில நாட்களில் நான் வேகத்தோடு பேசியிருக்கலாம், உறுப்பினர்களும் வேகத்தோடு இருந்திருக்கலாம், அந்த அன்பு பரிமாற்றம், அண்ணன்-தம்பி இடையே ஏற்பட்ட பரிமாற்றம் என்றும், எந்த உறுப்பினரும் அவைத் தலைவர் மீது எந்த விதமான மாச்சர்யத்தையோ, மனத்தாங்கலையோ வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, உங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும். நான் இருக்கிற வரையில், நீங்கள் தந்தாக வேண்டும் என்று நான் பரிவோடு கேட்டுகொள்கிறேன்.

தற்போது, பேரவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது குறித்து, மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

(8) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையை இன்றையிலிருந்து கால வரம்பின்றி ஒத்திவைக்கலாம்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.